

சென்னை மேற்கு மாவட்ட திமுக சார்பில் நடைபெற்ற சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி, அண்ணாநகர் மற்றும் ஆயிரம் விளக்கு சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பாக நிலை முகவர்கள் (BLA2) பாக நிலை டிஜிட்டல் முகவர்கள் (BDA), பாக நிலை இளைஞர் அணி அமைப்பாளர்கள் (BYO) மற்றும் கழக நிர்வாகிகளுக்கான "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி சிறப்பு ஆலோசனைக் கூட்டத்தில் தயாநிதி மாறன் எம்.பி., மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் சிறரைப்புரையாற்றினர். உடன் எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., நா.எழிலன் எம்.எல்.ஏ., நா.ராமலிங்கம், எஸ். பரமசிவம், மா.பா.அன்புதுரை, வினோத் வேலாயுதம், எஸ்.மதன்மோகன், ஏ.ஆர்.பி.எம். காமராஜ், சி.எச்.சேகர், வே.கௌதமன், சைதை சாதிக் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை தெற்கு மாவட்டம் சோழிங்கநல்லூர் மத்திய பகுதி திமுக சார்பில் என் வாக்குச்சாவடி – வெற்றி வாக்குச்சாவடி ஆலோசனை கூட்டத்தில் SIR என்ற மக்கள் விரோத நடவடிக்கைகளை குறித்து 2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் சம்பந்தமாக ஆலோசனை கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர் டாக்டர். நா.சந்திரபாபு, ச.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. ஆகியோர்கள் ஆலோசனை வழங்கி பேசினர். உடன் எம். கே.ஏழுமலை, தா.பஷீர், எம்.பார்த்திபன், பா.அருண்குமார், டாக்டர்.என்.அனிஷ், வி.தனசேகரன், கே.டி.ரவி, வா.பாபு எம்.சி. F.ஆரோன் (எ)அரசு,ஜி.ரவி, டி.ராஜேந்திரன், பா.தேவகுமார், ஜி.சங்கர், ஆர்.நாகராஜ், ஏ.முருகேசன், கே.தேவேந்திரன், பி.கே. தங்கம், எஸ்.செல்வகுமார், கோ.முருகவேல், எஸ்ஆர். உமாபதி, ஏழுமலை, .தயாளன், .சுரேஷ்பாபு, .ஹரி, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கா.ராமச்சந்திரன் முன்னிலையில்

# நீலகிரி மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம்!

## தென்றல் செல்வராஜ் - பரமேஸ்குமார் - திராவிட மணி பங்கேற்பு!

நீலகிரி, நவ.5-

நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட அவை தலைவர் போஜன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜூ அவர்கள் அனைவரையும் வரவேற்றார். கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக் , தேர்தல் பணி செயலாளர், அரசு கொறடா கா.ராமசந்திரன், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் பரமேஸ்குமார், தென்றல் செல்வராஜ், திராவிடமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட துணைச் செயலாளர்கள் ரவிகுமார், லட்சுமி, மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் திராவிடமணி, செந்தில் ரங்கராஜ், தம்பி இஸ்மாயில், சுனிதா நேரு, மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் வாசிம்ராஜா, நகர செயலாளர்கள் ஜார்ஜ், ராமசாமி, இளஞ்செழியன், சேகரன், ரமேஷ், ஒன்றிய கழக செயலாளர்கள் பரமசிவன், லாரன்ஸ், நெல்லை கண்ணன், காமராஜ், தொரை, பிரேம்குமார், பீமன், சிவானந்தராஜா, சுஜேஷ், ராஜ்குமார், ஜெகதீசன், உத்தமன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் கருப்பையா, லியாகத் அலி, செல்வம், உதயதேவன், மோகன்குமார், வாணீஸ்வரி, மகேஷ், காளிதாசன், பேரூர் கழக செயலாளர்கள் பிரகாஷ்குமார், உதயகுமார், நடராஜன், சதீஸ்குமார், சுந்தர்ராஜ், காளிதாஸ், முத்து, ரமேஷ்குமார், சின்னவர், சுப்ரமணி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் சசிகுமார், கோமதி, ராஜா, எல்கில் ரவி, காந்தல் ரவி, ஆலன், விவேகானந்தன், ரஹமத்துல்லா, ஜெயந்தி, வெங்கடேஷ், பவீஷ், செந்தில்நாதன், ஜெயகுமார், சுரேஷ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பாபு, நாகராஜ், முரளிதரன், நகராட்சி தலைவர்கள் பரிமளா, சிவகாமி, பேரூராட்சி தலைவர்கள் கலியமூர்த்தி, கௌரி, சித்ரா தேவி, வள்ளி, ராதா, சத்திய வாணி, பங்கஜம், தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் செயலாளர் ஜெயராமன், உட்பட கழக நிர்வாகிகள் கலந்துக்கொண்டனர். மாவட்ட பொருளாளர் நாசர் அலி நன்றி கூறினார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

நீலகிரி மாவட்டத்தில் SIR தீவிர வாக்காளர் சரிபார்ப்பு பணியில் கழக தோழர்கள் முனைப்புடன் ஈடுபடுவோம்!.

2026 சட்டமன்ற பொதுத்தேர்தல் நடைபெற உள்ள தமிழ்நாடு, கேரளம் உட்பட 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இரண்டாம் கட்ட SIR பணி மேற்கொள்ளப்படும் என இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. ஒன்றிய பா.ஜ.க., அரசின் தூண்டுதலில் தேர்தல் ஆணையம் ஜனநாயகத்தை சீர்குலைக்கும் இந்த சதி செயலில் ஈடுபட துவங்கியுள்ளது.

நேர்மையான தேர்தலை நடத்தவேண்டும் என்பதை யாரும் மறுக்கவில்லை, ஆனால் வாக்காளர் சரிபார்ப்பு பணிகளுக்கு உரிய கால அவகாசம் கொடுக்க வேண்டும். எவ்வித பதற்றமும் இல்லாத சூழலில்தான் இந்த பணிகளை செய்ய வேண்டும். மாறாக தேர்தலுக்கு இன்னும் சில மாதங்கள் உள்ள நிலையில் முழுமையான வாக்காளர் பட்டியல் திருத்த பணிகளை மேற்கொள்ள நினைப்பது உண்மையான வாக்காளர்களை நீக்குவதற்கான தந்திரம் மட்டுமே ஆகும்.

ஒன்றிய அரசால், ஜனநாயகத்திற்கு தாக்குதல் ஏற்படும் அனைத்து காலகட்டத்திலும் முதலில் இதறக்கு எதிராக குரல் கொடுப்பது திமுக என்பதில் நம் அனைவருக்கும் பெருமையாகும்.

இந்நிலையில் SIR எனும் தீவிர வாக்கு சரிபார்ப்பு பணியில் ஒவ்வொரு கழக தோழர்களும் விழிப்புடன் செயல்பட வேண்டும் என நம் கழக தலைவர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

அதன்படி, நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகை, கூடலூர், குன்னூர் ஆகிய 3 சட்டமன்ற தொகுதிகளிலும் நடைபெறும் இப்பணியில் ஒவ்வொரு வாக்குச்சாவடி நிலை முகவர்கள் BLA 2 தவறாது வீடு வீடாக சென்று வாக்காளர் சரிபார்ப்பு பணியில் முனைப்புடன் ஈடுபட இக்கூட்டம் கேட்டுக்கொள்வதுடன், BLA 2 அனைவரும் செல்வதை ஒவ்வொரு நாளும் அந்தந்த நகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள் உறுதி செய்திட இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

நீலகிரி மாவட்டத்தில் என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்சாவடி பூத் பரப்புரை

கழக தலைவர் தமிழக முதல்வர் அவர்கள் கடந்த 28.10.2025 அன்று சென்னையில் என். வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்சாவடி எனும் பயிற்சி பட்டறை நிகழ்ச்சியை சிறப்புடன் நடத்தி, எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் கழகம் மீண்டும் ஆட்சி பொறுப்பில் அமர்ந்திட தேவையான கழக நிர்வாகிகள், தோழர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த ஆலோசனைகளை வழங்கினார்கள்.

அதன்படி, நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்சாவடி நிகழ்ச்சிகளை தலைமை கழகம் வழங்கும் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி சிறப்புடன் நடத்துவது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.



பல்லாவரம் தொகுதி புனித தோமையார் மலை வடக்கு ஒன்றிய செயலாளர் ஜி.கே.ரவி தலைமையில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சுனில் மேத்யூ வரவேற்பிலும் துணை அமைப்பாளர்கள் கார்த்திக் , ஐயப்பன் , பிரசாத் ஆகியோர் முன்னிலையிலும் ஒன்றியத்திற்க்குட்பட்ட பொழிச்சலூர் திரிசூலம் ஊராட்சிகளில் கிளை இளைஞரணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பாக இளைஞரணி அமைப்பாளர்கள் ஆகிய பொறுப்புகளுக்கு தொகுதி இளைஞரணி பார்வையாளர், சென்னை மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ப.பிரகாஷ் துணை அமைப்பாளர்கள் பாலச்சந்தர், மோகனவேல், இம்ரான், விக்னேஷ் ஆகியோர் விண்ணப்பித்தவர்களை நேர்காணல் செய்து கலந்துரையாடினார்கள். இந்நிகழ்வில் வனஜா தயாளன், ஜோசப், செல்வராஜ் ராஜா ஆகியோருடன் கிளை செயலாளர்கள் மற்றும் கழக தோழர்கள் பங்கேற்றனர்.

# திருவாரூரில் "என் வாக்குச்சாவடி வெற்றிவாக்குச் சாவடி" ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் கே.என்.நேரு- — பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவாரூர், நவ.5-

திருவாரூர் மாவட்டத்திற்கு உட்பட்ட திருவாரூர், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, நன்னிலம் சட்டமன்ற தொகுதிகளின் ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களுக்கான வாக்குச்சாவடி நிலைமுகவர்கள் BLA2, BDA, மற்றும் தி.மு.கழக செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம், கழக முதன்மை செயலாளரும் திருச்சி மண்டல பொறுப்பாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என். நேரு தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட கழக செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எ.ல்.ஏ., தேர்தல் பொறுப்பாளர்கள் எஸ்.கே.வேதரத்தினம், ஜெகவீரபாண்டியன், ராஜாசீனிவாசன், சௌமியன் வைத்தியநாதன், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்கள் பி. ராஜமாணிக்கம், ப. ஆடராசன், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்களம் ஜி.பாலு, அவைத்தலைவர் க.தன்ராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ்.கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், சாந்தி பாஸ்கர், மு.வெங்கடேசன் உள்ளிட்ட கழக நிர்வாகி கள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் பேசிய அமைச்சர் கே.என்.நேரு, வாக்குச்சாவடி பணிகளை சரியாக செய்தோ மேயானால் நம் வெற்றி உறுதியாகும்.மீண்டும் தளபதி மு. க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தி.மு.க. ஆட்சி வரவேண்டியது அவசியம். அதுதான் நமது தமிழ்நாட்டுக்கும், தமிழ் மக்களுக்கும் பாதுகாப்பை தரும். தி.மு.க. நிர்வாகிகளை குறிவைத்து தாக்கும் பா.ஜ.க.வின் முயற்சியால் நாங்கள் துவண்டுவிட மாட்டோம். பந்துபோல மீண்டு எழுவோம் எனவும், வாக்குச்சாவடி முகவர்க ளான BLA2, BDA ஆகியோரின் பணிகள் குறித்தும், SIR தீவிர வாக்காளர் திருத்தம் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

வாக்குசாவடி முகவர்கள் அனைவரும் ஒன்றிய பி.ஜே.பி. அரசின் கைப்பாவையாக செயல்படும் தேர்தல் கமிஷன் SIR உள்ளிட்ட செயல்பாடுகள் மூலம் என்னென்ன குறுக்குவழிகளை கையாண்டு தில்லுமுல்லுகளை மேற்கொண்டாலும், கழகத்தலைவர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களின் வழிகாட்டுதல்களின்படியும், கழக சட்டத்துறையின் மூலம் கொடுக்கப்பட்டிருக்கும் வழிகாட்டு நெறிமுறைகளின்படியும் அவற்றை எதிர்கொண்டு "வெல்வோம்200 படைப்போம் வரலாறு" என்கிற கழகத்தின் முழக்கத்தை வென்றெடுப்போம் என தீர்மானம் மேற்கொண்டு களப்பணிகளை மேற்கொள்ள உறுதியேற்றனர்.

### எழும்பூர் சட்டமன்ற தொகுதி

# 99வது வார்டில் ஏரியா சபை கூட்டம்!

## பரிதிஇளம்சுருதி எம்.சி. தலைமையில் !

சென்னை, நவ.5-

அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே. சேகர் பாபு வழிகாட்டுதலின்படி, எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ. வேலு ஆலோசனைப் படி, கழக அயலக அணி மாநில துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் சட்ட மன்ற தொகுதி 99வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி தலைமையில், எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டுக்கு உட்பட்ட மெனாட் தெருவில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், ஏரியா சபா கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட சேவை துறை அதிகாரிகள் மற்றும் குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரிய அதிகாரிகள் கலந்து கொண்டு பொதுமக்களின் குறைகள் மற்றும் கோரிக்கைகளை கேட்டு அறிந்தனர்.



திரு.வி.க நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 206 பாகங்களுக்குரிய அனைத்து கட்சிகளையும் சார்ந்த பாகமுகவர்கள் ( BLA 2 ) இந்திய தேர்தல் ஆணையத்தின் சிறப்பு பயிற்சி கூட்டத்தில் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. தொகுதி பார்வையாளர் தண்டலம் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் பகுதி செயலாளர்கள் செ.தமிழ்வேந்தன், சாமிக்கண்ணு, வட்டச்செயலாளர்கள் ருத்திரமூர்த்தி, பரிமளா சுரேஷ், எம்.ஏ.டீக்கா, எம்.இசட்.அபோய், தமீம்பாய், பொல்லுசுரேஷ், மாமன்ற உறு.பினர் சரவணன் மற்றும் திரு.வி.க.நகர் தொகுதியை சார்ந்த அனைத்து பாகமுகவர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வண்ணை தேவகி
**நவம்பர் 5 (2009)**



பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரது கொள்கைப் பற்றாலும், பேச்சாற்றலாலும் தன்னலம் கருதாத் தியாகத்தாலும் ஈர்க்கப்பட்டு, இளம்வயதிலேயே கழக மேடைகளில் உரையாற்றியவர்.

கழகம் நடத்திய போராட்டங்களில் எல்லாம் பங்கேற்று பலமுறை சிறை சென்றுள்ளார்.

கழக மகளிர் அணியின் செயலாளராகவும், துணைத் தலைவராகவும், இணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து வந்தவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, மாநகராட்சி சுகாதாரநிலைக்குழுவின் தலைவராக திறம்பட பணியாற்றியவர்.

முதல்வர் கலைஞர் அவர்கள் 1999ஆம் ஆண்டு தமிழக அரசின் சார்பில் 'அம்பேத்கர் விருது' வழங்கி சிறப்பித்தார்.

"கழகம், கழகம் என்று தன்வாழ்நாள் முழுவதையும் கழகத்திற்காகவே செலவழித்து, அவர் பேசாத கிராமங்களே இல்லையென்ற அளவிற்கு, கழகப் பிரச்சாரத்தில் தன் இளம்பிராயத்திலிருந்து ஈடுபட்டவர்" என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### திண்டுக்கல் மேற்கு மாவட்டம்

# பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல்

# தேர்தல் முடிவு!

## தலைமைக் கழக அறிவிப்பு

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் திண்டுக்கல் மேற்கு மாவட்டத்தில், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட கே.எஸ்.எஸ்.எம். சேக் சிக்கந்தர் பாட்சா அவர்கள் நத்தம் மத்திய ஒன்றியக் கழக பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதால்; திண்டுக்கல் மேற்கு மாவட்டம், **பொதுக்குழு உறுப்பினர்** பொறுப்புக் கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, **நவம்பர் 4 (செவ்வாய்க்கிழமை) அன்று ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்"** என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதை யொட்டி;

திண்டுக்கல் மேற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கு எம்.மகுடீஸ்வரன் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**திண்டுக்கல் மேற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக,**

திரு. **எம்.மகுடீஸ்வரன்,**
615/2, பழனி மெயின் ரோடு,
பழனி,
வயலூர்,
திண்டுக்கல் மாவட்டம் 624618.


அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை- 600 018.
நாள்: 04.11.2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தீப்பொறி ஆறுமுகம்
**நவம்பர் 5 (2016)**



சிறிய வயதிலேயே பேச்சாளராகி, கழக மேடைகளில் எந்த கருத்தையும் தைரியமாக எடுத்துச் சொல்லி, தமது பேச்சாற்றலால் பெரும் புகழ் பெற்று, தனக்கென்று ஒரு ரசிகர் பட்டாளத்தையே உருவாக்கிக் கொண்டவர்.

நெருக்கடிநிலை காலத்தில், மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைவர் கலைஞர் அவர்கள், "இவர் தனது பதினைந்தாவது வயதிலேயே தந்தை பெரியார் அவர்களின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றி, பெரியாரால் அப்போதே பாராட்டப்பட்டவர். இவருடைய பேச்சைக் கேட்டு பேரறிஞர் அண்ணா அவர்கள்தான் இவருக்கு "தீப்பொறி" என்ற அடைமொழியை குறிப்பிட்டு, பின்னர் காலப்போக்கில் "தீப்பொறி" என்றாலே இவரைக் குறிப்பிடும் அளவிற்கு பெயர் பெற்று விட்டார்" என தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**